# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2025

| | | | | |
|---|---|---|---|---|
| **கத்தோலிக்க திருமறை** | **Three Hours** | **14** | **T** | **I,II** |
| **Catholicism** | **Gr -11** | | | |

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(3) உமக்கு வழங்கப்பட்டடுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி - I

1. கத்தோலிக்க திருவிவிலியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களின் எண்ணிக்கை.
   1. 66  2. 73  3. 47  4. 69

2. இலங்கை கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்
   1. புனித ஜோசவ்வாஸ் அடிகள்
   2. அருள்பணி பீற்றர் பிள்ளை அடிகள்
   3. அருள்பணி யாக்கோமே கொண்சால்வெஸ் அடிகள்
   4. புனித மக்சிமிலியன் கோள்பே அடிகள்

3. திருவழிபாட்டின் பிரதான பகுதிகளுள் ஒன்று அல்லாதது
   1. திருப்பலி  2. திருமணித்தியாலம்  3. திருப்புகழ்மாலை  4. அருளடையாளங்கள்

4. “பரத்தமையில் ஈடுபடுவோர் தம் சொந்த உடலுக்கெதிராகவே பாவம் செய்கின்றனர்” என புனித பவுல் கூறியது.
   1. கொரிந்தியருக்கு  2. தெசலோனிக்கருக்கு  3. எபேசியருக்கு  4. உரோமையருக்கு

5. திருவருகைக்காலத்தில் கொண்டாடப்படும் முக்கியமான திருவிழா
   1. மரியா இறைவனின் அன்னை
   2. மரியாவின் அமல உற்பவத் திருவிழா
   3. கிறிஸ்து பிறப்பு விழா
   4. இயேசுவின் திருக்காட்சிப் பெருவிழா

6. ஒருவர் தமது திறமைகளில் மட்டும் நம்பிக்கை கொள்வது
   1. 1ம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்
   2. 3ம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்
   3. 5ம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்
   4. 10ம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்

7. பவுல் அடிகளாரின் கூற்றுப்படி (உரோ.1:18-32) எல்லாப் பாவங்களுக்கும் காரணமாக அமைவது
   1. ஆசை  2. பொறாமை
   3. இறைவனைப் பற்றிய அறிவின்மை  4. கல்வி அறிவற்ற தன்மை

8. பூங்காவனத்தில் இயேசுவோடு செபிக்கச் சென்ற திருத்தூதர்களுள் அடங்காதவர்.
   1. பேதுரு   2. யாக்கோபு   3. யோவான்   4. யூதா

9. அருள்பணி மைக்கல் றொட்றிக்கோ அடிகளாரால் ஆற்றப்பட்ட முக்கியமான சேவைகளுள் ஒன்று
   1. மரியாயின் மாசற்ற இருதய சேனை என்ற அமைப்பை உருவாக்கினார்
   2. வறிய நாடுகளை அடிமைப்படுத்தும் செல்வந்த நாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்
   3. வீதியோரங்களில் இருந்த பிள்ளைகளுக்கு பாடசாலை ஒன்றை அமைத்தார்
   4. பௌத்த - கிறிஸ்தவ சமயங்களுக்கிடையே நட்புறவை, ஒற்றுமையை ஏற்படுத்தினார்.

10. நற்கருணையின் சிறப்பியல்புகளுள் ஒன்று அல்லாதது
   1. நன்றி கூறுதல்   2. நினைவு கூருதல்
   3. ஆண்டவரின் திருவிருந்து   4. உணவு

11. மக்களுக்காக மக்கள் சார்பாக வேதனம் எதுவும் பெறாது செய்யும் பணியைக் குறிக்கும் சரியான சொல்
   1. லாஓஸ்   2. லிட்டர்ஜி   3. எர்கோன்   4. லிட்டர்ஜியா

12. பிள்ளைகள் மட்டில் பெற்றோர் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுள் பொருத்தமற்றது
   1. நற்பண்பும் அறிவும் உள்ள பிள்ளைகளாக வளர்ப்பது
   2. பிள்ளைகளை அன்பு செய்வது
   3. பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக இருப்பது
   4. பிள்ளைகள் தவறு செய்யும் போது பாராமுகமாக இருப்பது

13. திருப்பலியில் இறைமக்கள் ஒரு யாத்திரைப் பயணத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதை நினைவு படுத்துவது
   1. வருகைப்பவனி   2. காணிக்கைப்பவனி   3. திருவிருந்துப்பவனி   4. நற்கருணைப்பவனி

14. “குற்றமில்லா மனித உயிரை எவரும் நேரடியாக அழிக்கக் கூடாது. இது மனித மாண்பிற்கும் படைத்தவரின் தூய்மைக்கும் முரணானது” என்பது
   1. திருச்சபையின் சட்டக்கோவையில் கூறப்பட்டுள்ளது.
   2. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலில் கூறப்பட்டுள்ளது.
   3. விடுதலைப்பயண நூலில் கூறப்பட்டுள்ளது.
   4. பவுலடிகளாரின் திருமடல்களில் கூறப்பட்டுள்ளது.

15. திருப்பலிக்கு தலைமை தாங்கும் குருவானவரினால் சொல்லப்படும் செபங்களில் பொருத்தமற்றது.
   1. நன்றி மன்றாட்டு   2. நற்கருணை மன்றாட்டு
   3. காணிக்கை மீது மன்றாட்டு   4. சபை மன்றாட்டு

16. “இந்நாள் உங்களுக்கு ஒரு நினைவு நாளாக விளங்கும். இதனை ஆண்டவரின் விழாவாகக் கொண்டாடுங்கள்” இக் கட்டளை வழங்கப்பட்ட சந்தர்ப்பம்
   1. இயேசுவின் இறுதி இராவுணவின் போது
   2. இஸ்ரயேல் மக்களின் பாஸ்கா விழாவின் போது
   3. உயிர்த்த இயேசு சீடர்களுக்கு காட்சி கொடுத்த போது
   4. யூதர்களின் பெந்தக்கோஸ்தே நிகழ்வின் போது

17. “…தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்…” இச் செபம்
   1. இயேசு கற்பித்த செபமாகும்.   2. விசுவாச அறிக்கை செபமாகும்.
   3. கெத்சமேனி செபமாகும்.   4. உன்னத குருத்துவ செபமாகும்.

18. எயிட்ஸ் நோயாளரைப் பராமரிப்பதற்கான இல்லம் முதன்முதலில் …………………… நகரில் ஆரம்பிக்கப்பட்டது.
   1. கல்கத்தா   2. நியூயோர்க்   3. ஜேர்மனி   4. இத்தாலி

கீழ் வரும் விடயங்களைக் கருதுக

**A** - தரக்குறைவான பேச்சுக்களைப் பேசுதல்

**B** - சமாதானத்தை ஏற்படுத்த முன்வராமை

**C** - பெற்றோரை ஏமாற்றுதல்

**D** - சிறுவர் துஸ்பிரயோகம்

**E** - தவறான உறவுகளை வளர்த்தல்

19. மேற்படி கூற்றுக்களில் 6ம், 9ம் கட்டளைகளுக்கு எதிரானது
    1. A, D, E   2. A, B, C   3. A, C, D   4. C, D, E

20. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற இயேசுவின் கட்டளைக்கேற்ப உலகின் கடை எல்லைவரைக்கும் நற்செய்தி போதிக்கப்பட்டமை பற்றிய விடயங்களை உள்ளடக்கிய நூல்
    1. பவுலின் திருமுகம்   2. யோவான் நற்செய்தி
    3. திருத்தூதர்பணி நூல்   4. லூக்கா நற்செய்தி

21. கத்தோலிக்க திருவிவிலியத்தில் மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ………… நூல்கள் இணைத்திருமுறை நூல்கள் என அழைக்கப்படுகின்றன.
    1. 9   2. 4   3. 7   4. 13

22. திருமுழுக்கு யோவானின் போதனையோடு தனது நற்செய்தியை ஆரம்பிக்கும் நற்செய்தியாளர்
    1. புனித லூக்கா   2. புனித மத்தேயு   3. புனித யோவான்   4. புனித மாற்கு

23. 19ம் நூற்றாண்டில் திருச்சபையில் தோன்றிய பேதகம்
    1. ஜன்ஜெனிசம்   2. குவைட்றிசம்   3. மொனோத்தேலோ   4. லெக்சியோ

24. மனித வாழ்வைப் பாதுகாக்கவும், கட்டியெழுப்பவும் அவசியமானது
    1. பொருளாதாரம்   2. சமாதானம்   3. கூட்டுறவு   4. போர்வெற்றி

25. 'யாவே' என்றால் அதன் பொருள்
    1. ஆண்டவராகிய கடவுள்   2. ஆண்டவராகிய தேவன்
    3. தொடக்கமும் முடிவும் அல்லாதவர்   4. எல்லாம் வல்ல இறைவன்

26. இறைவாக்கினர்கள் இறைவாக்குரைக்கும் போது பயன்படுத்திய சொற்பதங்களுள் பொருத்தமற்றது.
    1. "ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது"
    2. "என்கிறார் ஆண்டவர்"
    3. "ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்"
    4. "இருக்கிறவராக இருக்கிறவர் நானே"

27. சபாத் நாளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துபவர்
    1. ஏலொகிம் மரபின் ஆசிரியர்   2. குரு மரபின் ஆசிரியர்
    3. இணைச்சட்ட மரபின் ஆசிரியர்   4. யாவே மரபின் ஆசிரியர்

28. "… நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப் பின் உன் வழிமரபினருக்கும் வழங்குவேன்…." என இறைவன் வாக்குப்பண்ணியது
    1. மோசேக்கு   2. ஈசாக்கிற்கு   3. யாக்கோபிற்கு   4. ஆபிரகாமிற்கு

29. காயீன் தனது சகோதரனை …………………. கொன்றான்.
    1. ஆணவத்தால்   2. அன்பால்   3. பொறாமையால்   4. அகங்காரத்தால்

30. பித்தோம், இராம்சேசு குறித்த சரியான கூற்று
    1. இவை எகிப்தியர்களால் கட்டப்பட்ட கோபுரங்கள்.
    2. பார்வோன்கள் இஸ்ரயேல் மக்களுக்காக கட்டிய நகரங்கள்.
    3. பார்வோனுக்காக இஸ்ரயேல் மக்களால் எகிப்தில் கட்டப்பட்ட களஞ்சிய நகர்கள்.
    4. இஸ்ரயேல் மக்கள் தமக்காக கட்டிய நகரங்கள்.

31. திருமுழுக்கு யோவானின் பிறப்பினால் எடுத்துக்காட்டப்படும் விடயம்
    1. திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவர் என்பது.
    2. திருமுழுக்கு யோவான் பாலைநிலத்தில் போதிக்கக்கூடியவர் என்பது.
    3. இறைவனால் ஆகாதது ஒன்றும் இல்லை என்பது.
    4. இவர் செக்கரியா, எலிசபெத்தின் மகன் என்பது.

32. பின்வரும் கூற்றுக்களில் திருத்தந்தை பெரிய லியோவின் கூற்றாக அமைவது
    1. ''இயற்கைக்கு மாறாக இடம்பெறுவது புதுமை''
    2. ''பிள்ளைகளின் பிறப்பினால் உலகம் அணி செய்யப்படுகிறது.''
    3. ''வாழ்வென்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும்''
    4. ''திருமுழுக்கின் மூலமாக நீங்கள் தூய ஆவியின் ஆலயம் ஆனீர்கள். கனமான பாவம் புரிந்து அந்த மாபெரும் உத்தமரை உங்கள் ஆன்மாவிலிருந்து அகற்றிவிடாதீர்கள்.''

33. ஓய்வு நாளில் இயேசு செய்த புதுமைகளில் ஒன்று
    1. கைசூம்பியவர் குணமடைதல்
    2. தீய ஆவி பிடித்தவர் குணமடைதல்
    3. நயீன் ஊர் கைம்பெண்ணின் மகன் உயிர்பெறல்
    4. இலாசர் உயிர் பெற்றமை

34. விதைப்பவன் உவமையில் இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ, துன்பமோ ஏற்பட்டவுடன் தடுமாற்றம் அடைபவர்கள்.
    1. பாலைநிலத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்கள்
    2. வழியோரத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்கள்
    3. வயல் வெளிகளில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்கள்
    4. முட்புதரில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்கள்

35. தொடக்கத்தில் ……………………….. மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது.
    1. வானத்தின் 2. நீர்த்திரளின் 3. ஆகாயத்தின் 4. தரையின்

36. புரட்டாதி 08 திருச்சபையால் கொண்டாடப்படும் திருவிழா
    1. திருக்குடும்பத் திருவிழா 2. மரியாவின் பிறப்பு
    3. மரியாவின் அமல உற்பவம் 4. மரியாவின் விண்ணேற்பு

37. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர் திருப்புகழ் மாலைக்கு வழங்கப்பட்ட பெயர்
    1. கட்டளைச் செபம் 2. நாளிகை வழிபாடு 3. மாலை ஆராதனை 4. வெஸ்பர்

38. தாம் படைத்தவற்றை மனிதன் ஆளவேண்டும் என்பது இறைவனின் விருப்பம். இதை வலியுறுத்தும் படைப்புக் கதை
    1. முதலாவது 2. பெருவெடிப்புக் கொள்கை 3. இரண்டாவது 4. பரிணாமக்கோட்பாடு

39. வனத்துப் பிதாக்களில் முதன்மையானவர்
    1. எகிப்து அந்தோனியார் 2. புனித பக்கோமியஸ்
    3. தேப்ஸ் சின்னப்பர் 4. புனித ஆசீர்வாதப்பர்

40. திருமண அருளடையாளத்தின் வெளி அடையாளமாக இருப்பது.
    1. மாலை அணிவது 2. மோதிரம் மாற்றுதல்
    3. திருமணப்பதிவு 4. திருமண ஒப்பந்தம்

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1)

1. திருவிவிலியத்தில் வெளிப்படுத்தல் நூல்கள் என அழைக்கப்படுகின்ற இரு நூல்களினதும் பெயரைத் தருக?
2. பெந்தஸ்கோஸ்தே நாளில் இயேசு வாக்குப்பண்ணிய தூய ஆவியின் வருகையை வெளிப்படுத்திய அடையாளங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
3. சுதந்திரத்தின் பின்னர் குறிப்பாக 1960ம், 1961ம் ஆண்டுகளில் இலங்கைத் திருச்சபை எதிர்கொண்ட இரு சவால்களையும் எழுதுக?
4. இறையன்புக்கு எதிரான பாவங்கள் இரண்டு தருக?
5. எவ்வாறான செயல்கள் 7ம், 10ம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் என திருச்சபை கணிக்கின்றது?
6. ஐந்நூல் உருவாகுவதற்குப் பங்களிப்புச் செய்த பாரம்பரியங்கள் இரண்டினது பெயர் தருக?
7. துறவற சபைகளை வகைப்படுத்தும் இரு பிரதான வகைகளையும் எழுதுக?
8. கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள் இரண்டையும் தருக?
9. திருமுழுக்கு யோவான் படைவீரருக்கு கூறிய அறிவுரைகள் 2 தருக?
10. உள்ளார்ந்த மனம் வருந்துதலுக்கு ஒருவர் செய்ய வேண்டிய விடயங்கள் 2 தருக?

(10x2=20 புள்ளிகள்)

2)

1. முதன்முதலாக எழுதப்பட்ட நற்செய்தி நூலையும் அது எழுதப்பட்ட காலப்பகுதியையும் குறிப்பிடுக?
2. புதிய ஏற்பாட்டு நூல்கள் வகைப்படுத்தப்படும் விதத்தினைக் குறிப்பிடுக?
3. உமது அன்றாட வாழ்வில் இறைவார்த்தையை பிரயோகிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக? (2+3+5=10 புள்ளிகள்)

3)

1. திருப்பலியின் இரு பிரதான பகுதிகளையும் குறிப்பிடுக?
2. திருப்பலிக்கு பொருத்தமாக முன்னுரை ஒன்றை ஆயத்தம் செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 3 தருக?
3. திருப்பலியை செயலூக்கமுள்ள வழிபாடாக மாற்றுவதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் 5 தருக? (2+3+5=10 புள்ளிகள்)

4)

1. தொடக்க நூல் முதல் 11 அதிகாரங்களையும் வாசிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய இரு விடயங்களைக் குறிப்பிடுக?
2. மனிதன் மேன்மையானவன் என்பதைப் பிரதிபலிக்கும் 3 பண்புகளையும் எழுதுக?
3. இன்றைய சமுதாயத்தில் பெருகிவரும் பாவச் செயலுக்கு அடிமையாகாமல் வாழ்வதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் 5 கூறுக? (2+3+5=10 புள்ளிகள்)

5)

1. திருப்புகழ் மாலை செபம் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னரும், அதன் பின்னரும் அழைக்கப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுக?
2. நற்செய்தி நூல்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு திருப்புகழ் மாலையில் செபிக்கப்படும் 3 புகழ்ச்சிப் பாடல்களையும் குறிப்பிடுக?
3. திருப்புகழ் மாலையின் முக்கியத்துவத்தினை 5 விடயங்கள் மூலம் முன்வைக்குக?

6)

1. பிற இனத்தாரின் திருத்தூதரான புனித பவுல் தனது மறைதூதுப் பயணங்களின் போது முகங்கொடுக்க நேர்ந்த சவால்கள் 2 தருக?
2. பொதுத் திருமுகங்களின் எழுத்தாளர்கள் மூவரின் பெயர் தருக?
3. எதிர்கால சமுதாயத் தலைவராக இன்றைய பல்சமயச் சூழலில் வாழும் நீர் இறையாட்சியை மையமாகக் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கு பின்பற்றவேண்டிய வழிகள் 5 தருக?

7) விரும்பிய இரண்டு தலைப்பில் சிறுகுறிப்பு எழுதுக.

1. கெத்சமெனி செபம்
2. திருவழிபாட்டு ஆண்டில் தவக்காலம்
3. ஐந்நூலின் முக்கியத்துவம்
4. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

(5x2=10 புள்ளிகள்)